# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்.

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)முன்னோடிப் பரீட்சை – 2017**

| தரம் : 11 | தமிழ் இலக்கிய நயம் | நேரம் : 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் : ........................................................................................ 48 T I, II

**கவனிக்க:**

i) பகுதி I இல் 1ம் 2ம் வினாக்களுக்கும் பகுதி II 3ம் வினாவுக்கும் பகுதி II இல் எவையேனும் இரண்டு வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி - I

**(01) (1) தொடக்கம் (5) வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

(1) கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
----------------------------------------
புலவாது ஒழிதல் -------------------------
மாதா பெருங்கற்பு என்று.

அ) இங்கு சோழன் கங்கையைப் புணர்ந்தாலும் காவிரிபுலவாமைக்குக் காரணம் யாது?

ஆ) இப் பாடல் இடம் பெறும் சந்தர்ப்பம் யாது?

(2) அனிச்சமும் அன்னத்தின் துவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

அ) இக்குறளினூடாக வர்ணிக்கப்படும் பெண்ணின் அங்கம் எது?

ஆ) இதில் காணப்படும் அணியைக் கூறி விளக்குக.

(3) "பாரூக் நானா ! எனக்கு கடிதமீக்கியா?"

அ) இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டுள்ளது?

ஆ) கடிதமீக்கியா என்ற சொல்லின் சரியான எழுத்து வடிவம் யாது?

(4) "கயிறுகளை மேய விட்டு
கொழுத்தன மாடுகள்
பூசனி"

அ) இக்கவிதையின் ஊடாக நேரடியாகச் சுட்டப்படும் பொருள் யாது?

ஆ) குறிப்பாகச் சுட்டப்படும் பொருள் யாது?

(5) "பிள்ளை மீன் புள்ளரிக்கும் நாடன் திருமடந்தை---"

அ) இங்கு திருமடந்தை எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

ஆ) இங்கு கூறப்படும் நாடு எது? ($4 \times 5 = 20$ புள்ளிகள்)

**(02) கீழ்காணும் பாடற்பகுதியை வாசித்து தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.**

ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்
　　எழுந்து யிர்த்தனன் நாள் ஒரு மூன்றில்
நேச மாமரியா மத்த லே நா
　　நேரிலே இந்த செய்தியைக் கண்டாள்
தேசத்தீர் இதன் உட்பொருள் கேளீர்
　　தேவர் வந்து நமக்குட் புகுந்தே
நாச மின்றி நமை நிதங் காப்பார்
　　நம் அகந்தையை நாம் கொன்று விட்டால்

**அன்புகாண் மரியா மக்த லேநா**
**ஆவி காணுதீர் யேசு கிறிஸ்து**
**முன்பு தீமை வடிவினைக் கொன்றால்**
**மூன்று நாளினில் நல்லுயிர் தோன்றும்**
**பொன்பொ லிந்த முகத்தினிற் கண்டே**
**போற்றுவாள் அந்த நல்லுயிர் தன்னை**
**அன்பெனும் மரியா மக்தவேநா**
**ஆஹா சாலப் பெருங்கிளிஃதே**

**உண்மை யென்ற சிலுவையிற் கட்டி**
**உணர்வை ஆணித் தவங் கொண்டடித்தால்**
**வண்மைப் பேருயிர் யேசு கிறிஸ்து**
**வான மேனியில் அங்கு விளங்கும்**
**பெண்மை காண் மரியா மக்த வே நா**
**பேணும் நல்லறம் யேசு கிறிஸ்து**
**நுண்மை கொண்ட பொருளிது கண்டீர்**
**நொடியி லிஃது பயின்றிட லாகும்.**

i. *இயேசு எப்போது உயிர்த்தார்?*

ii. *தேவர் மானிடரைக் காக்கும் நாள் எது எனக் குறிப்பிடுகின்றார்?*

iii. *இயேசுவின் மீது மரியாள் கொண்ட மதிப்பும், மரியாள் மீது இயேசு கொண்ட மதிப்பையும் பாரதியார் எவ்வாறு எடுத்துக் காட்டுகின்றார்?*

iv. *இப்பகுதியில் கூறப்பட்டுள்ள அணியினை இனங்கண்டு விளக்குக.*

v. *இக்கவிதை மூலம் நீர் பெற்றுக்கொண்ட படிப்பினைகள் யாவை?* (25 புள்ளிகள்)

## பகுதி - II

**(03) கீழ்காணும் உரைப்பகுதியினை வாசித்து தரப்பெற்றுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

*போர் செய்தலையே தம் வாணாளின் குறிக்கோளாகக் கொண்ட இம்மன்னர்கள் புகழடைவதற்கு மேற்கொண்ட வழி சற்று வித்தியாசமானதே! இதனைக் காட்டிலும் வேறு வழியில் வாழ்வதால் நல்லதொரு புகழை அடைய முடியும் என இவர்கள் ஏனோ நினைக்கவில்லை? ஆனால் இப்பேரரசர்கள் வாழ்ந்த அது காலத்தில் சிற்றரசர்களும் வாழ்ந்துள்ளனர். அவர்கள் வாழ்க்கையில் மேற்கொண்ட குறிக்கோள் முற்றிலும் வேறானதாகக் காணப்படுகின்றது. கடை எழு வள்ளல்களைப் பற்றியும் இப்புறப்பாடல்கள் பேசுகின்றன. அவர்களும் புகழ் படைத்தவர்களாகவே உள்ளனர். என்றாலும் என்ன வேற்றுமை? புகழ் என்ற ஒன்றை அடைய முற்றிலும் வேறுபட்ட இரு வழிகளைக் கையாண்டுள்ளனர். யாருடைய வழி சிறந்தது? போர் வெறி கொண்டு நாட்டிற்கு நன்மை என்ற பெயரால் தமிழர்களுடைய குருதியை தமிழ் மண்ணில் ஆறாகப் பெருகவிட்டுத் தம்முடைய மக்களும், தோற்ற மக்களும் ஒரு சேர அவதிப்படச் செய்த இப் போர் வெறியர்களும் புகழடைந்து விட்டதாகச் செருக்குற்றிருந்தனர். பிறருக்குத தீங்கு புரிபவர்களைக் கனவிலும் கருதாதவர்களாய் வாழ்ந்த அவ்வள்ளல்களும் புகழ் பெற்றனர். அறிவின் துணை கொண்டு புகழ் தேட முயன்ற இப்போர் வெறியர்கள் எங்கே? இவ்விரு சாராரும் பெற்றது ஒரே புகழ்தான் என்றாலும் இருவரும் கையாண்ட வழிகள் எவ்வளவு மாறானவை? அடையும் பயன் ஒன்றேயாயினும் மேற்கொள்ளும் வழி வேறுபாட்டால் இருவரும் இருவேறு துருவங்கட்குச் சென்று விட்டனர்.*

i. *இவ்வுரை நடைப் பகுதியில் பேசப்படும் மூவரும் யாவர்?*

ii. *மன்னர்கள் புகழ் அடைவதற்கு மேற்கொண்ட வழி யாது?*

*வள்ளல்கள் புகழ் அடைவதற்கு மேற்கொண்ட வழி யாது?*

iii. இவற்றில் யாருடைய வழிபோற்றத்தக்கது? அதற்கான காரணத்தை விளக்குக.

iv. மன்னர்களின் நடவடிக்கையால் ஏற்பட்ட விளைவுகள் எவை?

v. இப்பகுதியில் ஆசிரியர் மொழி நடைச் சிறப்பினைக் கூறுக. (25 புள்ளிகள்)

## பகுதி - III

**(04)** கிட்கிந்தைப் படலத்தை ஆதாரமாகக் கொண்டு
இலக்குமணனின் வருகையைக் கண்ட கிட்கிந்தை மலை வாழ் குரங்குகளின் நிலையும் கிட்கிந்தை மலையின் பொலிவற்ற நிலையும் காட்டப்படுமாற்றை விளக்குக.

**(05)** "தெளிவு" என்ற சிறுகதையில் தபால்காரர் பாரூக் நானா வாழ்க்கையின் பஞ்சப் போராட்டத்தில் தவிக்கும் பாத்திரமாகவே சிருஷ்டிக்கப்பட்டுள்ளார். விளக்குக.

**(06)** பெருமரமாகிப் போனதொரு வாழ்வு எனும் கட்டுரையில் பாலுமகேந்திரா எனும் திரைப்பட ஆளுமையின் பன்முக ஆற்றல் எவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**(07)** மாதவி பற்றிய கண்ணகியின் மனப்பதிவுகள் வஞ்சியர் காண்டம் எனும் நாடகப் பகுதி யினூடாக எவ்வாறு காட்டப்பட்டுள்ளது. விபரிக்குக.

The National e-learning Portal for The General Education